මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/01/01/35/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.12.03

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றிக்கை: 04/2024**

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்,

**2025 ஆம் வருடத்திற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்டம்**

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் வரையறைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வகையில் அரசாங்கத்தினால் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கு உட்பட்டு அரசாங்கத்தின் நடுத்தரக் கால அரசிறை வேலைச்சட்டகத்திற்குள், 2025 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்ட வரைபு மதிப்பீடு உங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடி தயாரிக்கப்பட்டுள்ளது.

02. எவ்வாறாயினும், ஆரம்பத்தில் காணப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற்றின் அடிப்படையில் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள தற்காலிக வரைபு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள செலவினங்கள் புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையிலும் 2024.11.25 ஆந் திகதிய 2412/08 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிதாக தாபிக்கப்பட்ட அமைச்சரவை கட்டமைப்பு என்பவற்றுக்கு அமைவாக மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுதல் வேண்டும்.

03. இப் பின்னணியில், உங்களது அமைச்சுக்களின் நோக்கெல்லைக்குள் உரிய அபிவிருத்தி கருத்திட்டங்களின் மூலதன செலவினம் மற்றும் நலன்புரி /நிவாரணங்களாக செயற்படுத்தப்படும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய மீண்டெழும் செலவினம் தொடர்பாகவும் மீளாய்வு செய்து அவற்றினை மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை மீண்டும் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு புதிய அமைச்சுக் கட்டமைப்பின் கீழ் ITMIS மூலம் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனால், அவற்றுக்கான புதிய மதிப்பீட்டினை 2024.12.08 ஆந் திகதிக்கு முன்னர் உள்ளீடு செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஒப்பம்/-**
**கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. செயலாளர், நிதி ஆணைக்குழு
5. கணக்காய்வாளர் நாயகம்